(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 59.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2023 செப்தெம்பர் 21, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

9/2023

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இலங்கையில் எட்டாவது நிறைவேற்றதிகார சனாதிபதிக்கு தற்போதுள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) அவ்வொவ்வொரு ஆலோசகர்களினாலும் ஆலோசனை வழங்கப்படும் விடயத்துறைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) அவ்வொவ்வொரு ஆலோசகர்களுக்கும் வழங்கப்படும் சம்பளங்களும் ஏனைய கொடுப்பனவுகளும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி ஆலோசகர்கள் நியமிக்கப்படுகையில் பின்பற்றப்படும் முறையியல் மற்றும் கருத்திற்கொள்ளப்படும் அளவுகோல்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

388/2023

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கண்டி தேசிய வைத்தியசாலையில் மனித உறுப்புகள் சம்பந்தப்பட்ட தீத்தொழில் முன்னெடுக்கப்படுவதாக 2022.01.27ஆம் திகதி "லக்சர" சமூக ஊடகத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டுரையொன்றினால் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி தீத்தொழில் தொடர்பில் விரிவான விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறு கண்டி தேசிய வைத்தியசாலையின் நிபுணத்துவ வைத்தியர்கள் குழுவொன்று கோரிக்கை விடுத்துள்ளது என்பதையும்;

அவர்அறிவாரா?

(ஆ) (i) "இறந்த நன்கொடையாளர் உறுப்பு தான தேசிய திட்டத்தின்" கண்டி வலயத்திற்கான பிரதம தொழிற்பாட்டு பொறுப்பதிகாரி, அந்த வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு இதுகுறித்து தெரியப்படுத்தியுள்ளதற்கான தகவல்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) இத்தகைய குற்றச்சாட்டு சுமத்தப்படுவதன் மூலம் கண்டி தேசிய வைத்தியசாலை குறித்து மக்கள் மத்தியில் தவறானதொரு மனப்பாங்கு உருவாவதையும், வைத்தியசாலைக் கட்டமைப்பு மீதான நம்பிக்கை தகர்க்கப்படுவதையும் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) இக் குற்றச்சாட்டு அடிப்படையற்றதாயின், அதையொட்டி சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

424/2023

கௌரவ கயந்த கருணாதிலக்க,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் வருடாந்தம் உணவு நிமித்தம் நுகரும் தேங்காய் எண்ணெயின் அளவு;

(ii) அதில், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அளவு;

(iii) இறக்குமதி செய்யப்படும் அளவு;

யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உள்நாட்டுத் தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்களில், இன்றளவில் பதிவு செய்யப்பட்டுள்ள உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) பதிவு செய்யப்படாத தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் இருப்பதை அறிவாரா என்பதையும்;

(iii) இவர்கள் உற்பத்தி செய்யும் தேங்காய் எண்ணெய் சந்தைக்கு விநியோகம் செய்யப்படுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) தரநியமங்களுக்கு இயைபற்ற தேங்காய் எண்ணெயை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களுக்கு எதிராக எடுக்கவிருக்கும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

437/2023

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொங்கல, ஹேஸ்வத்தைக்கு அருகில் கிங்கங்கையின் நீரேந்துப் பிரதேசமானது இயந்திரங்களைக் கொண்டு வெட்டி துப்பரவு செய்யப்படுகிறது என்பதையும்;

(ii) கொங்கல மலையின் உச்சி வரை விசாலமான பாதையொன்று அமைக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) அதன் காரணமாக எதிர்வரும் காலங்களில் மண்சரிவு ஏற்படக்கூடும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட சுற்றாடல் அழிவினைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) கொங்கல சுற்றாடல் தொகுதிக்குரிய இரண்டாயிரத்து ஐநூறு ஹெக்டயர் காணிகளை சிங்கராஜ வனாந்தரத்துடன் ஒன்றிணைப்பது தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை நடைமுறைப்படுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) கொங்கல சுற்றாடல் தொகுதியைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5.

3351/2023

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மாகாண சபைகளின் நிர்வாகத்தின் கீழுள்ள அரச வைத்தியசாலைகளினதும் சுகாதார நிலையங்களினதும் எண்ணிக்கை தனித்தனியே யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையினதும் சுகாதார நிலையத்தினதும் பெயர், அவை அமைந்துள்ள மாகாணம் மற்றும் மாவட்டம் தனித்தனியே யாது;

(iii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையிலும் இருக்க வேண்டிய மற்றும் தற்போது இருக்கின்ற மருத்துவர்கள் மற்றும் நிபுணத்துவ மருத்துவர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாது;

(iv) மேற்படி வைத்தியசாலைகளில் காணப்படுகின்ற மருத்துவர்களுக்கான வெற்றிடங்களை நிரப்ப மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலதிக கற்கைக்காக 2015 ஆம் ஆண்டின் பின்னர் வெளிநாடு சென்ற மருத்துவர்கள் மீண்டும் இலங்கைக்கு வருகை தராமல் உள்ளனரா;

(ii) ஆமெனில், அம்மருத்துவர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

3358/2023

கௌரவ ஜயந்த சமரவீர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் சுகாதார அமைச்சினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அத்தியாவசிய மேற்கத்தேய மருந்து வகைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றின் பொதுப் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு மருந்து வகையும் உற்பத்தி செய்யப்படுகின்ற நாடு, உற்பத்தி செய்கின்ற கம்பனி/நிறுவனம் மற்றும் இலங்கைக்கு இறக்குமதி செய்கின்ற கம்பனி/நிறுவனம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்படுகின்ற மருந்து வகைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பொதுப் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(v) மேற்படி (iv)இல் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையானது மொத்த அத்தியாவசிய மருந்து வகைகளின் எண்ணிக்கையில் எத்தனை சதவீதம் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அண்மைக்காலத்தில் அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரிப்பின் சதவீதத்தை விட அதிக சதவீதத்தில் மருந்துகளின் விலைகள் அதிகரித்தன என்பதனை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மருந்துகளின் விலை அதிகரிப்பினைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

3409/2023

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரகம பிரதேச செயலகப் பிரிவின், 668 ஆம் இலக்க அளுத்கம கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள சுமார் 1.5 கி.மீ தூரத்தைக் கொண்ட "கம்மான பார" எனும் பெயரிலான வீதியில் ஒரு இலட்சம் கிராமிய வீதிகளுக்கு காபட் இடும் வேலைத்திட்டத்தின் கீழ் காபட் இட்டு அபிவிருத்தி செய்வதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், சுமார் 06 மாதங்களுக்கு முன்னர் அபிவிருத்திப் பணிகள் இடைநடுவே நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) வீதியில் காணப்பட்ட தார் மற்றும் கொங்கிரீட் பகுதிகள் கழற்றி அகற்றப்பட்டு ஆங்காங்கே ABC அடுக்கு மாத்திரம் இடப்பட்டதோடு மழை காரணமாக மேற்படி ABC அடுக்கும் அடித்துச் செல்லப்பட்டு தற்போது அவ்வீதி பயணிக்க முடியாதளவுக்கு பழுதடைந்துள்ளதென்பதையும்;

(iii) காபட் இடப்படும் வரை தற்காலிக ஏற்பாடாக அவ்வீதிக்கு தார் இடுவதற்கு களுத்துறை, மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை மதிப்பீடொன்றைச் சமர்ப்பித்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) அதன் பிரகாரம், தற்காலிக தார் அடுக்கு இடப்பட்டு மேற்குறிப்பிட்ட வீதி துரிதமாக புனரமைக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

3484/2023

கௌரவ வேலு குமார்,— நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தின், பஹத்த ஹேவாஹெட்ட பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் குடும்பங்களில் குழாய் மூலமான குடிநீர் வசதிகளைக் கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலகப் பிரிவில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

3570/2023

கௌரவ லலித் எல்லாவல,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் அரச ஊழியர்களுக்குரிய மாதாந்த ஓய்வூதியம் செலுத்துவதை ஆரம்பிக்க சுமார் பத்து மாதங்களுக்கும் அதிகமான காலம் எடுக்கப்படுகின்றது என்பதையும்;

(ii) இத்தாமதம் காரணமாக சில அரச ஊழியர்கள் தமது முதலாவது ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு முன்னர் மரணிக்கும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன என்பதையும்;

(iii) மேற்படி தாமதமானது அரச ஊழியர்களுக்கு இழைக்கப்படும் பாரிய அநீதியாகும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி தாமதத்திற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) குறித்த தாமதத்தைத் தடுப்பதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி தாமதத்தைத் தடுப்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

3596/2023

கௌரவ ஹர்ஷண ராஜகருணா,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) சனாதிபதி செயலகத்தில் இயங்கி வருகின்ற விசேட கருத்திட்ட அலகினூடாக 2022.07.14 ஆம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி அலகில் தற்போது பணியாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு ஊழியரினதும் பெயர், பதவி, சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கப்பட்டுள்ள வாகனங்கள் உள்ளிட்ட வசதிகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) மேற்படி அலகில் பணியாற்றுகின்ற ஒட்டுமொத்த பணியாட்டொகுதியினரும் அரசியல் கட்சியொன்றில் முழுநேர ஈடுபாடுடையவர்கள் என்பதனை அறிவாரா என்பதையும்;

(v) மேற்குறித்த அலகினைப் பராமரிப்பதற்காக மாதாந்தம் செலவிடப்படும் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்),— (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 9.30 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்கப் பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவை சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2023 செப்டெம்பர் 17 ஆம் திகதிய 2349/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.09.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*2.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (188 ஆம் அத்தியாயமான) 1940 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் 46 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 47(1) ஆம் பிரிவின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் 2023 மே 25 ஆம் திகதி ஆக்கப்பட்டதும் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கைப் பொறுப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

சிரேட்ட அறிவுறுத்தும் சட்டத்தரணிகள் என்ற கௌரவிப்பை அளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

நீதிமன்றம், நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

இலங்கைத் துறைமுக அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

குடியியல் வான்செலவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*14.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— குடியியல் வான்செலவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 6,10,11,13,14,16 மற்றும் 31 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 117 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய 2292/34 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*15.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— குடியியல் வான்செலவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, குடியியல் வான்செலவுச் சட்டத்தின் 6, 10, 11, 26, 31(ஈ), (உ),(ஊ),(எ) மற்றும் (ஏ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 117(2)(ஞ) பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 ஏப்ரல் 03 ஆம் திகதிய 2326/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிகள்,— (276 ஆம் அத்தியாயமான) கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் கூட்டிணைக்கப்பட்ட சட்டக்கல்விப் பேரவையினால் ஆக்கப்பட்டு, 2023 மே 15 ஆம் திகதிய 2332/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.07.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*17.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்.— மத்தியஸ்த (விசேட வகுதிளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க மத்தியஸ்த சட்டத்தின் 4 (2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட்ட வேண்டிய 27 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 சனவரி 14 ஆம் திகதிய 2314/80 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*18.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்.— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 29அ(2) ஆம் பிரிவின் கீழ், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 ஏப்ரல்.21 ஆம் திகதிய 2328/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 45(1அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 61 ஆம் பிரிவின் கீழ், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 யூலை 04 ஆம் திகதிய 2339/06 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*20.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— கம்பெனிகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 222 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 527 ஆம் பிரிவின் கீழ் கைத்தொழில் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 17 ஆம் திகதிய 2323/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.08.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்,— அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— 1995 ஆம் ஆண்டுக்கான 35 ஆம் இலக்க, அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் சட்டத்தின் 4(1)(ஊ) ஆம் பிரிவின் கீழ், வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 26 ஆம் திகதிய 2294/54 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.09.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— கப்பற்றொழில் முகவர்களுக்கு கப்பற்சரக்கனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு கப்பற்சரக்கனுப்புநர்க்கு, கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் சட்டத்தின் 3(5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 யூலை 07 ஆம் திகதிய 2287/24 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 மார்ச் 24 ஆம் திகதிய 2324/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

25.

பலபிட்டிய ஸ்ரீ ராஹுலாராம புராண விஹாரஸ்த்த சாமனேர ஆகல்ப சங்வர்தன பிக்ஷு கல்லூரி (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

26.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

கிழக்கு மீளெழுச்சி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிபீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

சஹன சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

சமாதி தியான மன்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

றுஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

"மாத்தறைப் பருவம்" அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.

இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.

விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.

முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.

தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.

இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.

திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.

திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.

தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.

பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51.

மாகாணசபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

52.

இலங்கை மருந்தியல் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

53.

இலங்கை பட்டயக் கப்பல்தரகர்கள் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

54.

ஶ்ரீ லங்கா பெப்டிஸ்ட் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.